IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

OS. 35/2019

Deposition of Witness : PW 1

Name : அஞ்சலட்சுமி (வயது – தெரியாது)

Father's Name /W/o : க/பெ பிச்சைமணி

Religion : இந்து

Caste : –

Calling : –

Address : சித்தேரி

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 23.10.2025.

## குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. என் கணவர் இதுவரை ஜீவனாம்சம் எவ்வளவு கொடுத்துள்ளார் என்றால் ரூ.24,000 கொடுத்துள்ளார். என் கணவர் ஜீவனாம்சம் கட்டிய ரசீது குற்றவியர் நடுவர் நீதிமன்றத்தில் உள்ளதா என்றால் கட்டு காணவில்லை. சென்னை உயர்நீதிமன்றத்தில் என் கணவர் ஜீவனாம்சம் வழங்கவில்லை என்று உத்தரவு பெற்றேனா என்றால் சரிதான். உயர்நீதிமன்றத்தில் நான் விவாகரத்து வாங்கியதை மறைத்து உத்தரவு வாங்கினேன் என்றால் எனக்கு விவாகரத்து ஆகவில்லை. உயர்நீதிமன்றத்தல் இருந்து உத்தரவு பெறுவதற்கு முன்பே எனக்கும் என் கணவருக்கும் விவாகரத்து நடைபெற்றதால் ஜீவனாம்சம் என்னால் கோர முடியாது என்றால் எனக்கும் என் கணவருக்கும் விவாகரத்து ஆகவில்லை. என் கணவர் 2008,2009 ஆண்டுக்கான ஜீவனாம்சம் கட்டிவிட்டார் என்றால் நான் வாங்கவில்லை. ரூ.24,000 கொடுத்தார்கள்

அதுதான் எனக்கு தெரியும்.

2. என் கணவர் கொடுத்த ரூ.24576 ஜீவனாம்சம் நான் வாங்கினேனா என்றால் இல்லை. நான் என் முதல் விசாரணையில் காசோலை மூலமாக பணம் பெற்றேன் என்று தெரிவித்து தற்போது மாற்றி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் 24000 எப்போதோ வாங்கினேன் தற்போது வாங்கவில்லை. எத்தனை வருடத்திற்கு முன்பு ஜீவனாம்சம் வாங்கினேன் என்றால் சுமார் 20 வருடம் இருக்கும். என் கணவர் விவாகரத்து கோரி வழக்கு தாக்கல் செய்த பின்பு ஜீவனாம்சமாக எந்த பணமும் வாங்கவில்லை என்றால் சரிதான்.

3. எனக்கும் என் கணவருக்கும் விவாகரத்து கொடுத்த காரணத்தின் அடிப்படையில் நான் ஜீவனாம்சம் கோர முடியாது என்றால் சரியல்ல. இந்த வழக்கை நான் மனைவியாக தாக்கல் செய்ய தகுதி இல்லை என்றாலும் எனவே இந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும என்றால் சரியல்ல. நான் எனக்காக ஜீவனாம்சம் கோரி வழக்கு தாககல் செய்துள்ளேனா அல்லது என் பிள்ளைகளுக்காக ஜீவனாம்சம் கோரி வழக்கு தாக்கல் செய்துடள்ளேனா என்றால் எனக்குகாக மற்றும் என் பிள்ளைகளுக்காகவும் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். என் பிள்ளைகள் மேஜர் ஆகிவிட்டார்களா என்றால் ஆகிவிட்டார்கள். என் பிள்ளைகள் மேஜர் ஆகிவிட்ட காரணத்தினால் என்னால் அவர்களுக்காக வழக்கு தாக்கல் செய்வது சரியல்ல. எனவே இந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.